# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# திருவாடானை
# முதலாமாண்டு மாணவர்களுக்கான
# ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம் – அறிக்கை

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 30-6-2025 முதல் ஆறு நாட்களுக்கு ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம் நடைபெற்றது. இதில் மாணவ மாணவியருக்கு பாடத்திட்டம் பற்றியும், கல்லூரியின் வசதிகள் குறித்தும், அரசு செயல்படுத்தும் நலத்திட்டங்களான தமிழ்ப் புதல்வன், புதுமைப் பெண், நான் முதல்வன் ஆகியன குறித்தும் தகவல்கள் வழங்கப்பெற்றன. ஒவ்வொரு நாளும் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த அறிக்கைகள் பின்வருமாறு தொகுத்தளிக்கப் பெறுகின்றன..

**நாள்** 1 (30-6 -2025 )

இன்று காலை 10 மணி அளவில் அறிமுகப் பயிற்சித் திட்டத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் மு.பழனியப்பன் தலைமை தாங்கினார். ஆசிரியர்கள், மற்றும் அலுவலர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அடுத்த நிகழ்வாக மாணவ மாணவிகள் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். அதன்பின் பேராசிரியர் ச. செல்வம் அவர்கள் தமிழக அரசின் மாணவ மாணவியருக்கான திட்டங்கள் குறித்து உரையாற்றினார். இதன்பின் வழக்கறிஞர் திரு. கண்ணன் அவர்கள் மாணவ மாணவியர்க்கு தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் உரையாற்றினார். அவர் தமது பேச்சில் கல்வியின் முக்கியத்துவம்,

மாணவ மாணவியரைக் கல்வி உயர்த்தும் பாங்கு முதலியன குறித்து உரையாடினார்.

மதிய வேளையில் கல்லூரியின் நூலகம், மற்றும் விளையாட்டுத்திடல் ஆகியன மாணவர்கள் பயன்படுத்திட ஏற்ற வகையில் காண்பிக்கப்பெற்றது.

**நாள்** 2 (1-7-2025)

இன்று மாணவ மாணவியருக்கு அழகப்பா பல்கலைக்கழகம் பற்றியும், அதன் செயல்பாடுகள் பற்றியும் முதல்வர் முனைவர் மு.பழனியப்பன் உரையாற்றினார். பாடத் திட்டம் அதன் அமைப்புகள் பற்றி ஒவ்வொரு துறைத் தலைவரும் எடுத்துரைத்தனர்.

இதன்பின் தொண்டி கோல்டன் ரோட்டரி சங்கத்தினர் வருகை தந்து மாணவர்களின் சமுதாயப் பங்களிப்பு குறித்து உரையாடினார். தலைவர் திரு முருகேசன் அவர்களும், ரோட்டரி துணை ஆளுநர் திரு வெற்றிவேந்தன் அவர்களும் மாணவர்களின் முன்னேற்றம் பற்றியும் சமுதாய முன்னேற்றம் பற்றியும் உரையாற்றினர்.




இதன்பின் அரசு வழக்கறிஞர் திரு ஜி. கணேஷ் பிரபு அவர்கள் மாணவர்களுக்கான உரிமைகள் குறித்தும் சட்டங்கள் குறித்தும் விழிப்புணர்வு உரையாற்றினார். கல்லூரியின் இணையதளம் குறித்தும் அறிமுகம் செய்யப்பெற்றது.

பிற்பகலில்  நான் முதல்வன்  திட்டம் பற்றிய அறிமுகத்தை அதன் ஒருங்கிணைப்பாளர் செய்தார். மாணவ மாணவிகளுக்கு  துறைகள் குறித்தான  காட்சியொளி காட்டப்பெற்றது.

<u>(**நாள்** 3) 2-7-2025</u>

இன்று  திருவாடானை மகளிர் காவல்  ஆய்வாளர், மற்றும் திருவாடானை மாவட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகியோர் வருகை தந்து  போதைப் பொருள் ஒழிப்பு,  மாணவர்கள் இருசக்கர வாகனத்தினைப் பயன்படுத்தும் போது ஏற்படும் சிக்கல்கள்,  உரிமம் பெறுவது, உரிமம் பெறாமல் இருசக்கர வாகனம் ஓட்டும்போது ஏற்படும்  இன்னல்கள், தண்டளைகள் பற்றி அறிவித்தனர். மாணவிகளின் பாதுகாப்பு கருதியும் அவர்கள் பேசினர். போக்சோ சட்டம், மற்றும் மனித உரிமைகள் குறித்தும் அவர்கள் உரையாற்றினர். திரு தர்மராஜ் அவர்கள் படைப்பாற்றலை வளர்க்கும் முறைமைகளைச் சொல்லித்தந்தார்.






பிற்பகலில் மாணவர்கள்  மகளிர் ஓய்வறை,சிற்றுண்டிச் சாலை வசதி போன்றன பற்றி நேரில் கண்டு அறிந்தனர். தொடர்ந்து நாட்டு நலப்பணித்திட்டம் குறித்து அதன் அலுவலர் முனைவர் ப. மணிமேகலை செய்திகளை அறிவித்தார்.

**நாள்** 4 (3-7-2025)

இன்று பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் செயலர் திரு ஆனிமுத்து அவர்கள் வருகை தந்து மாணவர்களுக்குச் செய்து தரப்பெற்றுள்ள வசதிகள் குறித்துப் பேசினார். மேலும் பேராசிரியர்  எஸ். சரவணன் அவர்கள் வகுப்பறைகளில் நடந்து கொள்ளும் விதம், ஆடை ஒழுங்கு ஆகியன குறித்து உரையாற்றினார். மேலும் பேராசிரியர்  ஆர். சரவணன் அவர்கள் மாணவியரின் பாதுகாப்பு, மற்றும் நலன் குறித்து உரையாற்றினார்.







பிற்பகல் நிகழ்வில் மாணவ மாணவியர்கள் காட்சித்தொடர்பியல் துறை ஆய்வகம், சி.எல்.பி ஆய்வகம், கணினி அறிவியல் துறை ஆய்வகம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். இதன்வழி கல்லூரியின் வசதிகள் பற்றி அறிந்தனர்.

(**நாள்** 5) 4-7-2025

இன்று பழைய மாணவர் திரு நவீன் குமார் தனது அனுபவங்களை, கலைத்திறனில் தான் உயர்ந்து நிற்க கல்லூரி உதவிய நிலையை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார். மேலும் முன்னாள் மாணவர் சங்கம் குறித்தும் மாணவர்கள் அறிந்து கொண்டனர்.



இன்று திரு எஸ்.கே. எஸ். குமார், மற்றும் திருமதி வித்யா கோடிஸ்வரன் ஆகியோரும் மாணவர்களுக்கு மன நலப் பயிற்சிகளை வழங்கினர்.





பிற்பகலில் கலைப் பயிற்றுநரின் கலை பயிற்று நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் மாணவர்களுடன் மாணவர்கள் கலந்துரையாடினர்.

(**நாள்** 6) 7-7-2025

5, 6-7-2025 ஆகிய நாட்கள் விடுமுறை என்பதால் 7-7 -2025 அன்று இந்தப் பயிற்சி தொடர்ந்து நடைபெற்றது. திரு பறம்பு நடராசன் அவர்கள் வருகை தந்து மாணவர்களுக்கு ஊக்கமூட்டும் பயிற்சி வழங்கினார். கவிஞர் சரவணராஜ் அவர்கள் வருகை தந்து மாணவர்களின் கலை ஆர்வத்தை வளர்த்தார்.


Pain of discipline
Pain of regret


உயர்கல்வித்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
2025 - 26 ஆம் கல்வியாண்டு
முதலாமாண்டு மாணவர்களுக்கான
ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம்
துவக்க நாள்: 30.06.2025
இடம்: அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

மேலும் இந்நிகழ்வில் பேராசிரியர் இராமமூர்த்தி இரத்த தானம் குறித்தும் திருவாடானை கல்லூரி ஆண்டு தோறும் இரத்ததானம் செய்துவருவது குறித்தும் உரையாற்றினார். மேலும் இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், ரெட் ரிப்பன் கிளப் பற்றியும் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பெற்றது.

நிறைவாக மாணவர்களிடமிருந்து பின்னூட்டம் பெறப்பட்டது.